செ.வெ.எண்-22 நாள்-09.09.2021

# பத்திரிக்கைச் செய்தி

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் வேலைவாய்ப்பு பிரிவின்கீழ் செயல்படும் அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டல் மையங்களால் சிறு, குறு மற்றும் பெரிய அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நேரடியாக நடத்தப்பட்டு தனியார் துறை நிறுவனங்களில் வழங்கப்பட்டு வந்தது.

தற்போது கொரோனா பெருந்தொற்று காரணமாக தமிழகத்தில் உள்ள படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களையும் வேலையளிக்கும் தனியார்துறை நிறுவனங்களையும் இணையம் வழியாக இணைத்து வேலைவாய்ப்புகளை பெற்றுத்தரும் நோக்கில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் வேலைவாய்ப்பு பிரிவால் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட தமிழ்நாடு தனியார் துறை வேலை இணையம் (https://www.tnprivatejobs.tn.gov.in) தமிழக அரசால் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.. எனவே அரியலூர் மாவட்டத்தினை சார்ந்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் மேற்படி இணையத்தினை (https://www.tnprivatejobs.tn.gov.in) பயன்படுத்தி தங்களின் கல்வித்தகுதிகேற்ப பணி வாய்ப்பினை தனியார் துறையில் பெற்றுக்கொள்வதற்கும், அரியலூர் மாவட்டத்தினை சார்ந்த வேலையளிக்கும் தனியார்துறை நிறுவனங்கள் தங்களிடம் உள்ள காலிப்பணியிடங்களின் விவரத்தினை மேற்கண்ட இணையதளத்தில் குறிப்பிட்டு தகுதி வாய்ந்த வேலை நாடுநர்களை தேர்ந்தெடுக்க வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையால் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தனியார்துறை வேலை இணையத்தில் (https://www.tnprivatejobs.tn.gov.in) தங்களது விவரங்களை பதிவு செய்திட கட்டணம் ஏதும் செலுத்தத் தேவையில்லை. முற்றிலும் இது ஒரு இலவச சேவையாகும். இச்சேவையினை அரியலூர் மாவட்டத்தினைச் சார்ந்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் மற்றும் வேலையளிக்கும் நிறுவனங்கள் பயன்படுத்திக்கொண்டு பயனடையுமாறு அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**